# வாரப்பாடசாலை செயற்பாட்டுப் பத்திரம்

## தரம் 13

01. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 250-300 சொற்கள் கொண்ட கட்டுரை வரைக.
    அ. மொழியும் பண்பாடும்
    ஆ. இன்றைய தமிழ் திரைப்படங்களின் போக்கு
    இ. வாசிப்புப் பழக்கத்தை வளர்த்தல்
    ஈ. போலித்தீன் பாவனையின் தீமைகளும் அவற்றைத் திர்ப்பதற்கான வழிமுறைகளும்.

02. அ. எட்டுத்தொகை நூல்களை பொருள் அடிப்படையில் வகைப்படுத்துக.
    ஆ. முதல் கரு உரிப்பொருளின் முக்கியத்துவத்தை விளக்குக
    இ. பல்லவர் கால இலக்கியங்களில் அகப்பொருள் மரபு கையாளப்பட்டுள்ளதை விளக்குக.

03. அ. சங்கமருவிய கால பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை வகைப்படுத்துக.
    ஆ. சங்கமருவிய காலத்தில் அற நூல்கள் அதிகம் எழுந்தமைக்கான காரணங்கள் எவையென விளக்குக.
    இ. சங்கமருவிய கால இலக்கியப்பணபுகளை விளக்குக.

04. 1. பின்வரும் வாக்கியத்திலுள்ள பொருள் மயக்கத்தை இனங்கண்டு திருத்தி எழுதுக.
       ‘காலஞ்சென்ற சிவகாமியின் அப்பாவை எனக்குத் தெரியாது’

    2. பின்வரும் வாக்கியத்திலுள்ள வழுவைச்சுட்டிக்காட்டி வழுவற்ற முறையில் திருத்தி எழுதுக.
       பிரதி வெள்ளிக்கிழமை தோறும் விசேட பூசை நடைபெறும்

    3. தீர், தா ஆகிய வினைச்சொற்களை அடியாகக் கொண்டு பிறக்கும் பெயர்ச் சொற்களுக்கு உதாரணம் தருக.

    4. பின்வரும் வாக்கியத்தை செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.
       பொலிசார் நிரபராதிகளை விடுவார்களா?

    5. பக்தி, பத்தி ஆகிய சொற்களின் பொருள் வேறுபடுமாறு தனித் தனி வாக்கியம் எழுதுக.